
---


அறிவேதான் தெய்வமென்றார்
தாயுமானவர்
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

------------------------------------------------------------------------------------------------------------------------------------

# அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்

"அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்,
அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி
அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்;
அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர், அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்,
அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்
அதை வாழ்ந்து காட்டினோர்நினைவு கூர்வோம்".- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

"அறிவேதெய்வம் என்னும் நுட்பமான கருத்தை நம் முன்னோர்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தெரிவித்துள்ளனர்.

தாயுமானவர், "அறிவான தெய்வத்தைப் போற்றுதல் என்பதில்........

- "பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே" (பரா.க.5)
- "சுத்த அறிவாய்ச் சுகம் பொருந்தின் அல்லால்" (பரா.க.23)
- "ஆங்காரம் அற்றுன் அறிவான அன்பருக்கே
  தூங்காத தாக்கம்அது தூக்கும் பராபரமே" (பரா.க.74)
- "மன்னுயிர்தேர்ந் தாயும் அறி வானதுநீ அன்றோ பராபரமே" (பரா.க.111)
- "தெள்வ அறிவே சிவமே பராபரமே" (பரா.க.202)
- ஆனந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே
- நின்றால் தெரியும் (ஆனந்தக்களிப்பு 20)
- "சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வம்" (தேசோ.8)
- "அறிவாகி ஆந்த மயமா என்றும்
  அழியாத நிலையாகி" (திரு.விலாச.1)

---

## திருவள்ளுவர் பார்வையில் "அறிவு"

திருவள்ளுவர் "தூய அறிவு" என்பதில்........

"கற்றதனா லாய பயனென்சொல் வாலறிவன்
நற்றாள்தொடா அர் எனின்" (குறள் 2)

வாலறிவன் தூய அறிவு வடிவானவன், மனிதகள் பலன்கள் வழி பெறும் மனமாசுகள் அறவிவில் சேர்ந்து, தூய்மை கெட்டு இறையிடமிருந்து விலகிக் காணப்படுகிறது. மாசுக்களை நீக்கி இறையோடு ஒன்றல் வேண்டும்.

"ஐயப்படா அது அகத்து உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்" (குறள் 702)

"சிறிதும் ஐயமின்றி தன்னகத்தே உள்ள அறிவாகிய இறையை உணர வல்லாரைத் தெய்வமாகவே கருதவேண்டும் என வேதாத்திரி மகரிசி விளக்கமளிக்கின்றார்.

## திருமூலர் பார்வையில் "அறிவு"

திருமூலர் - "அறிவின் அரும்பொருள்" என்பதில்,

- "ஆறாறுக்கப்பால் அறிவார் அறிபவர்" (திருமந்திரம் 2232)
- "அறிவாய சத்து" (திருமந்திரம் 20)
- "எல்லாம் அறிந்த அறிவினை நானெனில்
  எல்லாம் அறிந்த இறையென லாமே" (திருமந்திரம் 2551)
- அந்த மிலாத அறிவின் அரும்பொருள்"

என்று உரைக்கும் திருமூலர் அவ்வறிவை உணர

- அகத்தே கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" (திருமந்திரம் 2232)

---

## இராமலிங்க வள்ளலார் பார்வையில் "அறிவு"

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயல் உண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப பொருளாம் சிவம் ஒன்றே என்றறிந்தேன் (அனுபவமாலை)

என்றும், திருவடி புகழச்சி "அறிவென்னும் பதம்" என்பதில்

"என்னறி வெனும் பதம் என்னறிவி னுக்கறிவாய்
இருந்தசெங் கமலப் பதம்"

என்றும், மகாதேவ மாலை "அறிவுருவம்" என்பதில்,

"என்னறி வெனும் பதம் அஎன்னறிவி னுக்கறிவாய்
இருந்தசெங் கமலப் பதம்"

என்றும்,

"தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமே! மெய் அறிவுருவாம் தெய்வமே"

என்றும் உரைத்தல் காணலாம்.

## சித்தர்கள் பார்வையில் "அறிவு"

சித்தர்கள்" அறிவாய் நிலைத்தவர்கள்" என்பர்.

- "அவனுக்கே தெரியுமல்லால் அறிவாய்ப் பாரே" (அகத்தியர் ஞானம்)
- ஆடிய பாம்பை யடியாதே-இது
  அறிவு தானடி வாலைப் பெண்ணே (கொங்கணவ சித்தர்)

---

- அறிவிலே ஈசனே பிரமஞானம் உம்முளே" (சிவவாக்கியார்)
- "அங்கங் குணவாய் அறிவாகியே நிரம்பி
  எங்கெங்கும் ஆனதிலே ஏகரித்தாய் நெஞ்சமே" (பட்டினத்தார்.)

என இவர்கள் அறிவான இறையைக் குறிப்பிடக் காண்கிறோம்.

## ஔவையார் பார்வையில் "அறிவு"

ஔவையார் "அனைத்துருவமான அறிவு" என்பார்.

"அனைத்துருவம் ஆய அறிவை அகலில்
தினைத்துணையும இல்லை சிவம்"

- "தான் அதுவாகும் உண்மை"

"நன்றென்றும் தீதென்று நானென்றுத் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே நின்ற நிலை
தானதாந் தத்துவமாம்..." (நல்வழி)

தன் உயிரினுள்ளே இருக்கும் தெய்வத்தை, தான் அதுவாகும் உண்மையை உணர்தல் வேண்டுகிறார்.

## மாணிக்கவாசகர் பார்வையில் "அறிவு"

மாணிக்கவாசகர் "நுண்ணுர்வான அறிவு" என்பார்.

- "அஞ்ஞானம் தன்னை அகல்விளக்கும நல்லறிவே,
- "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே",
- உணர்ந்தமெய்ஞ்ஞானத்தால் - கொண்டு உணர்வார் தம் கருத்தின்
- நோக்கரிய நோக்கே! நுணுக்கு அரிய நுண் உணர்வே!."
- "சொல்லாத நுண் உணர்வாய்" (சிவபுராணம்)

---

## பாரதியார் பார்வையில் “அறிவு”

பாரதியார் “அறிவே தெய்வம் என்பதை உறுதியாக உரைக்கின்றார்.

“பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டொமெனல் கேளீரோ?
எதனுடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்மென்
ஜோதி யறியீரோ?
சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ?”

- “உள்ளதெல்லாம் தானகும் உண்மை”
- “ஒன்றுபிரம முளதுண்மைய ஃதுன் உணர்வெனக் கொள்வாயே”

(பரசிவ வெள்ளம்)

## நாராயணகுரு பார்வையில் “அறிவு”

“கேரளகீதை” என வழங்கப்படும் நாராயண குருவின் பாடல்களில்,

“அறிவு மறிஞ்ஞிடு மர்த்தவும் பூமான் தன்னறிவு மொராதி”
என்ற பாடலில் எங்கும் நிறைந்து விளங்குகின்ற அந்தப் பெரும் அறிவில் (ஆத்மாவில்) நானே அமர்ந்து அதனில், லயித்து அது மட்டுமேஆதல் வேண்டும், எனவும்

“அறிவனை விட்டஹமன்ய மாமகுமெந்நா
வறிவினெ யிங்ஙறியானு யாருமில்ல”

என்பதில்,

“அறிவினை விட்டுவிட்டு நான்வேறு என்றானவர் இந்த அறிவை அறிந்து கொள்ள இங்கு யாரும் இல்லை என்றாகிவிடும். எனவே,

---

அந்த அழிவற்ற அறிவும் நான் என்பதும் ஒன்றுதான் என்றாகிறது" எனக் குறிப்பிடுகின்றார்.

## நான்மைமறைகளில் "அறிவு"

- "ருக்வேதம் - "பரஜ்ஞானமே" ப்ரஹ்மம்
- "யஜீர்வேதம்" - "அஹம் ப்ர்ஹாஸ்மி" யே ப்ரஹ்மம்
- "ஸாம வேதம் - தத்மஸியே ப்ரஹ்மம்
- "அதர்வண வேதம்" - "அயமாத்மா" வே ப்ரஹ்மம்

என அறிவையே பிரம்மமான தெய்வம் என உரைத்தல் காணலாம்.

## பகவத்கீதை பார்வையில் "அறிவு"

"எல்லாம் நானே" என்று உணர்த்தும் கீதையும், "பார்த்தா, வேற விஷயங்களில் செல்லாது அப்பியாசம் என்னும யோகத்தோடு கூடிய சித்தத்தால் தேஜோமயமான பரம புருஷனைச் சிந்திக்கிறவன் அப்புருஷனை அடைகிறான்" (பகவத் கீதை - 8.8) என அறிவினையே குறிப்பிடுதல் அறியலாம்.

## உபநிடதங்கள் பார்வையில் "அறிவு"

உபநிடதங்களில், கைவல்யோப நிடதம் - 2.2 "அறிவு வடிவம்" என்பதில்...

- "எப்போதும் நான் அறிவு வடிவினனே, என்னிடமிருந்தே அனைத்தும உண்டாயிருக்கிறது. என்னிடமே அனைத்தும நிலைத்திருக்கிறது. என்னிடமே அனைத்தும் லயமடைகிறது. இரண்டற்ற அந்த பிரம்மமாக நான் இருக்கிறேன்" என்கிறது.

- ஸ்வேதாச்வதர உபநிடதம் (1.4) "அந்தராத்மா" என்பதில், "அணுவிற்கு அணுவாயும், பெரிதிற்குப் பெரிதாயும் உள்ள அவன், ஆத்மாவாக இந்த ஜீவனுடைய இருதய குகையில் மறைந்து உறைகிறான். ஆசை நீங்கியவன், இந்த ஆத்மாவைக் காண்கிறான் என்கிறது.

ஒருவனேயாகிய தேவன் எல்லா உயிர்களிலும் மறைந்து உறைகின்றான். எங்கும் வியாபித்தவன், எல்லா உயிர்களுக்கு அந்தராத்மா, அவன் அறிவு வடிவினன்" என்கிறது.

## முண்டக உபநிதம் பார்வையில் "அறிவு"

"மனமே அது" என்பதில்

"அவர் மனோ ரூபியாகவும் சரீரத்தையும பிராணனையும நடத்துபவராகவும், புத்தயில் நிலைபெற்று உடலில் உறைபவராகவும் விளங்குகிறார்" என்கிறது.

## சாந்தோக்யம் (அத்.7) பார்வையில் "அறிவு"

"மனதுதான் ஆத்மா", மனதுதான் உலகம்", "மனதுதான் பிரம்மம்", அதனால் நீ மனதை உபாசிப்பாயாக" என் தெரிவிக்கின்றன.

## நம்மாழ்வார் பார்வையில் "அறிவு"

"சென்று சென்று பரம்பரமாய்
யாதும் இன்றி தேய்ந்த அற்று
நன்று தீது என்று அறிவு அரிதால்
நன்றாய் ஞானம் கடந்ததே" (திருவாய்மொழி 8.8.5)

---

## விவேக சூடாமணி பார்வையில் "அறிவு"

- "சகல வாக்கு விஷயங்களுக்கும் விளங்காததும், பரசுத்த ஞானக் கணக்களுக்கு மட்டுமே தெளிவாக விளங்குவதும், சுத்த அறிவு ஸ்வரூபமாக இருப்பதும், ஆதியற்ற பொருளும், எல்லாவற்றிற்கும் மேலானதும் எதுவோ அந்த பரப்பிரம்ம மாகவே நீ இருக்கிறாய் எனச் சிந்தனை செய்" என ஆதிசங்கரர் உரைக்கின்றார்.

## இரமண மகரிசி பார்வையில் "அறிவு"

- "நான் யார்?" என்ற கேள்வியை உங்களுக்குள்ளேயே கேட்டு அதற்கு விடை காண்பதே முதன்மையானது. "நான் என்று அபிமானித்து எழும் அகத்தை எதனின்று எழுகிறதோ, பின்னர் எதனில் அது ஒடுங்கி மறையுமோ அதுவே நிஜ ஸ்ரூரூபம் ஆத்மா என்கிறார்.

## விவேகானந்தர் பார்வையில் "அறிவு"

விவேகானந்தர் "ஆன்ம ஆராய்ச்சி தேவை" என்கிறார்.

- "புற முயற்சி எதுவும் அனைத்திற்கும் அப்பால் உள்ள எல்லையற்ற் பொருளைப் பற்றி நமக்கு எதையும் கற்பிக்காது, அக முயற்சிகள் மட்டுமே அதைச் செய்ய முடியும்.

## தெய்வத்தை அறிய அறிவை அறி-- தாயுமானவர்

தெய்வத்தை அறிய வேண்டும் என்றால் முதலில் அறிவை அறிய வேண்டும் என்பது தாயுமானவரின் விருப்பம்.

---

சாதகன், அறிவைப் பற்றி தெரிந்து கொண்டால்தான் தெய்வத்தைப் பற்றி உணர்ந்து கொள்ள முடியும்.

தெய்வம் அல்லது இறைநிலை என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அதை எப்படி அறிவது?

உங்களுக்குள்ளாக இருக்கக்கூடிய அறிவைத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அதற்கும் அப்பால், அதற்கு ஆதியாக இருக்கக் கூடிய ஐம்புலன்களால் உணரமுடியாத தெயவத்தை எப்படி அறியமுடியும்?

அதனால் முதல் கட்டமாக நாம் அறிவை அறிந்து கொள்வோம்.

ஒவ்வொரு நாளும் அனுபவத்தால், வாழ்க்கையிலே நம்முடைய அறிவு அந்த எல்லையை நோக்கி தான் வளர்ச்சி பெற்றுக் கொண்டு இருக்கிறது.

மனிதனுடைய அறிவு இறைநிலையின் ஒரு பகுதி தான். அந்த இறை நிலையையும், அதன் ஒரு பகுதியாகிய இயற்கையையும் முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அறிவு விரிந்து கொண்டே இருக்கிறது.

எனவே, இறைவனைப் புரிந்து கொள்வது என்றால் முதலில் அறிவைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதன் பிறகு அறிவுக்கு மூலமான ஒரு நிலையை நாடிச் செல்ல வேண்டும். அந்த நிலைதான் இறைநிலை.

எனவே, அறிவை அறியாது இறைவனை அறிய முடியாது. எனெனில் இறைவனே தானே அறிவாக இருக்கிறான்?

## அறிவையறிதல் எப்படி?

தாயுமானவர் அறிவைப் பற்றி பல இடங்களில் குறிப்பிடுகிறார். அறிவுதான் ஆனந்தம் என்பார்.



அறிவே தெய்வம் என்பார். அறிவே அனைத்தும் என்பார். எனவே அறிவை அவர் எப்படி அறிந்தார். நாமும் அறிந்து கொள்வோம்.

"எல்லா அறியும் அறிவுதனை விட்டு
எல்லாம் அறிந்து ஈங்கொன்றுமில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நான் எனில்
எல்லாம் அறிந்த இறையென லாமே."

திருமூலர்.

அறிவுக்கு மேன்மை நிலையென்றும் உண்மைநிலையென்றும் இரு நிலைகள் உண்டு.

புலன்கள் மூலம் உணர்ச்சிகளாக, இன்ப-துன்ப - அனுபவங்களாக உலகை அறிகிறோம். இது புற அறிவாகும்.

அறிவின் படர்க்கை நிலையான அலைநிலையில் மனமாக இயங்கும் நிலை இது. இதுவே மேன்மை நிலை.

மனதின் உட்பொருளாக உள்ள அறிவுதான் மெய்ப்பொருள் எனும் உண்மையறிவு.

உள் என்ற சொல்லைக் கொண்டு உள்மை, உண்மை என வழங்கப்படுகிறது.

## வேதங்கள் உணர்த்தும் பிரம்மஞானம்.

---

“மனிதமனம் காந்த அலை மாஇறையே அடித்தளம்

மாய்த்திடப் புலன்கவர்ச்சி மனமது தன் ஒளிபெறும்

புனிதமா பிரம்மமே இப்பிரபஞ்சமாய்த் தானுமாய்

புரித்துள்ள தன் மலர்ச்சி புகழனைத்தும் உணரலாம்

தனித்தனியாய்த் தோன்றும் எந்த தரமுடைய பொருளிலும்

தத்துவமாம் தெய்வம் உள்ள தன்மையும் விளங்கிடும்

கனிந்த அந்தப் பேரறிவில் கருத்துணர்ந்த ஞானிகள்

கண்ட உயர் பிரம்மஞானம் காட்டினார் மறைகளில்.”
(ஞானக்களஞ்சியம்.)

இறைநிலையில் இருப்பாக இருந்த தன்மைகள் மூன்று. அவை பூரணம், பேராற்றல், பேரறிவு என்பனவாகும்.

இம்மூன்றையும் வேறு வேறாகக் கொள்ள முடியாது. மூன்றும் ஒன்று சேர்ந்த தன்மைதான் இறைநிலையின் இயல்பு.

எனவே இறைநிலை என்றாலும், பூரணம் என்றாலும் விரைவு (தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தப் பேராற்றல்) என்றாலும், அறிவு (எல்லாம் உணர் பேரறிவு) என்றாலும் ஒரே பொருளைத்தான் குறிக்கும்.

இந்த மூன்று தன்மைகளும் இறைநிலையான பிரம்மத்தின் பரிணாமத் தொடராக வந்த அனைத்திலும் தன்னடக்கமாகவே தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

எனவே, மனிதரிடத்திலும் பிரம்மம் எனும் இறைநிலை அனைத்தும் உயர் அறிவாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

எல்லா உயிரினங்களையும் விட மனிதனிடம் தான் இவ்வறிவு முழுமையாகத் திறமையில் புரித்து வருகிறது.

இந்த நிலையில் தன்னையறிந்து தனது இயல்புக்கு ஒத்த முறையில் எண்ணத்தையும், செயல்களையும் ஒழுங்குப்படுத்திக் கொண்டு வாழ்ந்து தனது முழுமை நிலையை மனிதன் அடைய வேண்டியுள்ளது.

இந்த இயல்பான தேவையால் உலக மாந்தர்கள் அனைவர் உள்ளத்திலும் தெரிந்தோ, தெரியாமலோ கடவுள் மேல் விருப்பம் உண்டாகிறது.

மனித சமுதாயத்தில் மெய்விளக்கம் பெற்ற ஞானியர்கள் முற்காலத்தில் குறைவாக இருந்ததாலும், நாடுகளோடு நாடுகள் எளிதில் தொடர்பு கொண்டு, அறிவறிந்தவர்கள் போதனை செய்த விளக்கங்களை, அனைவரும் பெற முடியாததாலும் விஞ்ஞான அறிவும், கல்வியறிவும் குறைவாக இருந்ததாலும், பெரும்பாலும் மக்களுக்குப் பக்தி வழியே எளிதில் கிடைத்தது. பரவியும் வந்தது.

பக்தி வழியில் உண்மையான இறைநிலையை மனிதன் உணர்ந்த கொள்ள முடியவில்லை.

இறைநிலையுணர வேண்டும் என்ற ஆர்வமானது அதை நிறைவு செய்து கொள்ள வாய்ப்பு இன்மையால் அது தடம் மாறி பொருள், புலனின்பம், புகழ், அதிகாரம் என்ற நான்கு வழிகளில் ஈடுபட்டு, ஆசை மிகுந்து, விளைவாகப் பலப்பல துன்பங்களை அனுபவித்து சலிப்பு அடைகிறது.

இந்த நிலைமையில்தான் அருட்பேராற்றலின் அனைத்துமுணர் அறிவின் கருணைச் செயலாக உலகில் பல இடங்களிலும்

---

உள்ளுணர்வு மூலம் இறைநிலையையும், அறிவின் நிலையையும் உணர்ந்த தாயுமானவர் போன்ற மகான்கள் தோன்றினார்கள்.

மக்கள் தேவையோ பிரம்மஞானம், வாழ்க்கை முறைகளும், கருத்துக்களும் அதற்கு முரணான தன்முனைப்பு, ஆறுகுணங்கள், ஐந்து பெரும் பழிச் செயல்கள் இவற்றில் பழக்கமாகி விட்டிருக்கின்றன.

இந்த நிலையில் மொழி மூலம் விளக்கம் கொடுத்து மனிதன் தன்னை உணரச் செய்ய இறைநிலை உணர்ந்த அறிஞர்களால் முடியவில்லை.

"வித்தையென்றால் பிரம்மவித்தை உயர்வதாகும்.

வேதாந்தம் பேசுவதால் கிட்டிடாது

அந்துவித மாகி அவன் எங்குமாகி

அணுமுதலாய் அண்டங்களாகி தாங்கும்

சுத்தவெளி சூனியமாய் நிறைந்த தன்மை

சூட்சுமமாய் அனுபவமாய் உணர்ந்து நிற்கும்

தத்துவத்தின் முடிவான தானேயான

தனையறிந்த வித்தையது தர்க்கம் வேண்டாம்."

(ஞானக்களஞ்சியம்.)

இயல்பாக எல்லாரிடத்திலும் இந்த உண்மைநிலை உணரும் ஆற்றல் அமைப்பாக இருக்கின்றது.

ஆயினும் ஒரு அறிவறிந்த குருவின் மூலம் பெறும் முறையான பயிற்சியினால்தான் வெற்றி கிட்டும்.

இந்தப் பயிற்சியைக் "குண்டலினி யோகம்" என்றும், சக்தி வழியென்றும் வழங்கப்படுகின்றது.

மனிதராகப் பிறந்து வாழும் எல்லாரிடத்திலும் உண்மை நிலையை உணரும் ஆற்றல் அமைப்பாக இருக்கிறது.

ஆயினும் படிப்படியாக அறிவிலும், செயலிலும் மாற்றம் பெற ஒரு அறிவறிந்த குருவின் மூலம் பெறும் முறையான அகத்தவப் பயிற்சி தேவையாகிறது. இந்தப் பயிற்சியை சிலர் சக்தி வழி என்பார்கள்.

குண்டலினி என்றால் மனிதன் உடலின் மையப் பகுதியில் அமைந்து உடலையும், மனதையும் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் தெய்வீக ஆற்றல் என்று பெயர்.

இதுவே சீவகாந்த ஆற்றலாகவும். இவ்வாற்றல் அமைந்துள்ள பகுதிக்குக் கருமையம் என்றும், மூலாதாரம் என்றும் பெயர்.

வினைப் பதிவுகள் எனும் சீவகாந்த அலைத்திரள்கள் கொண்ட அந்தத் தெய்வீக ஆற்றலைத்தான் அகம் என்றும் ஆன்மாவென்றும் இறைநிலையுணர்ந்த பேரறிஞர்களால் பேசப்படுகின்றது.

தொடர்ந்து வரும் பரிணாமங்களில் இறைநிலையானது காந்த ஆற்றல் திணிவை மையமாகக் கொண்டு அறிவாக விளங்குமிடம் இதுவே.

இந்த அறிவின் அலைநிலைதான் காந்தத் தன்மாற்ற முழுமையில் மனமாக இயங்குகின்றது.

மனம் தனது அலைகளை நுண்ணியதாக்கிக் கொண்டு இந்த ஆற்றலின் இருப்பு நிலையடைந்தால் அன்றி அறிவயைறிவதோ, இறைநிலையை அறிவதோ முடியாது.

வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்

“ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்

தெய்வத்தோ டொப்பக் கொளல்” என்று.

குருவின் அன்பு கிடைத்தால் இந்தப் பயிற்சியைக் கற்றுக் கொள்வதும் பயிற்சியாகப் பழகுவதும் மிக எளிது.

சில மணித்துளிகள் போதும், குடும்ப வாழ்வில் ஈடுபட்டள்ள ஆண், இரு பாலரும் இதனை மிகச் சுலபமாகக் கற்று பயிற்சி செய்து பயன் பெறலாம்.

## பயிற்சி முறைகள்

இப்பயிற்சியை வேண்டுபவர், முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சாதாரண மனிதருக்கும், குண்டலினி தவம் செய்து அறிவின் மேல்நிலைக்கு வந்தவர்க்கும் இடையே ஒரு வித்தியாசம் உண்டு.

சாதாரண கண்ணாடியை சூரிய வெளிச்சத்தில் வைத்து அதன் கீழே ஒரு கடிதத்துண்டு அல்லது துணியை வைத்தால் ஒன்றும் ஆகாது.

செறிவு ஏற்றப்பட்ட (magnifying Glass ) கண்ணாடியை அதேபோல் சூரிய வெளிசத்தில் காட்டி அதன் கீழே துணியை வைத்தால் முதலில் புகையும், பிறகு தீ பற்றி எரியும்.

---

இதே போன்று குண்டலினி ஆற்றல் மீது மனம் வைத்துத் தவம் செய்து வரும் பழக்கத்தால் அவருடைய சீவகாந்த ஆற்றல் நாளுக்கு நாள் செறிவு பெறுகிறது.

இந்தப் பேரியக்க மண்டலத்தையே தனது ஈர்ப்பு - தள்ளல் (Gravitational Repulsion ) எனும் ஆற்றலால் தோற்றுவித்து இயங்கி வரும் அருட்பேராற்றலே சீவகாந்தம் எனும் பிரணவப் பொருளாக சீவன்களிடம் இருப்பதால் அந்த ஆற்றலைத் தக்க மதிப்புடன் வேண்டிய அளவுக்குத் திணிவு பெறச் செய்தால் அதன் பயன் எவ்வளவு இருக்கும் என்று எழுத்தில் விளக்கிவிட முடியாது.

விஞ்ஞானிகளுக்கு தொலை நோக்கியும், பெருக்காடியும் உதவுதல் போல சீவகாந்தத் திணிவு பெற்ற மன ஆற்றலைக் கொண்டு அறிவைப் பல படிகளில் உயர்த்திக் கொள்ளலாம்.

அந்த உணர்வின் முடிவில் பெறக்கூடிய பேறுதான் இறை நிலையறிதல் அல்லது அறிவையறிதல் என்ற பெரும் பேறாகும்.

அறிவும் இறைநிலையும் ஒன்றாகவே இருப்பதால் ஒன்றையறியும் போது மற்றொன்றும் உடனாக அறியப்படுகிறது.

“அறிவதனை கருவினிலே இணைத்துத் தவமாற்ற

ஐம்புலன்கள் அமைதிபெறும் அறுகுணமும் சீராம்

அறிவு தன் விழிப்பநிலை பிறழாத தெளிவில்

ஐந்து பெரும் பழிச் செயல்கள் விளைய வழி ஏது?

அறிவு உயிரில் ஒடுங்கி அந்நிலையில் மேலும்

ஆழ்ந்து ஒடுங்கித் துரியம் நிற்க முன்வினைகள் போமே

அறிவு துரியாதீத நிலை நிற்க நிற்க

---

ஆதியாம் மெய்பொருளாம் அறும் பிறவித் தொடரே.

ஞானக்களஞ்சியம்.

குண்டலின் சக்தி என்பது சீவகாந்த ஆற்றலானது பல்லாயிரும் பிறவிகள் தொடராக குண, நல, மன சிறப்புப் பெற்ற ஒன்று, அதன் அலை நிலைதான் மனம். நிலைபொருள்தான் அறிவு.

மனதை அதன் மீதே செலுத்திப் பழகும் போது உடலில் உற்பத்தியாகி புலன்கள் மூலம் செலவாகும் காந்த ஆற்றலை உட்புறமாக அதிலேயே திரும்பத்திரும்பப் பாய்ச்சி சுழற்றப்படும் வியத்தகு பயிற்சி முறைதான் குண்டலினி யோகம்.

“இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்கவிட்டு
ஏற்படும்ஓர் அமைதியிலே விழப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்
நித்தம் நித்தம் உடலில் உயிர் இயங்குமட்டும்
உறைந்து உறைந்திந்நிலையில் பழகிக் கொள்ள
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்
கறை நீங்கி அறிவு மெய்ப் பொருளாய் நிற்கும்
கரைந்துபோம் தன்முனைப்பு, காணும் தெய்வம்.”

ஞானக்களஞ்சியம்.

சீவகாந்த ஆற்றலின் தன்மாற்றங்களே அழுத்தம், ஒலி,ஒளி, சுவை, மணம், மனம் இவையாகி உடலையும் நடத்துகிறது. மனமாகவும் இயங்குன்றது.

---

இதனை வீண் விரயம் செய்யாமல் சேமித்து நலம் கணித்து அளவு முறையோடு திட்டமிட்டுப் பயன்படுத்தும் அற்புதமான பயிற்சி முறையே மனதை வளப்படுத்தும் கலையாகும்.

மனதை வளப்படுத்தும் மனவளக்கலையின் கலையின் உச்சக்கட்ட பயன்தான் பிரம்மஞானம் என்னும் இறைநிலையையும் அறிவையும் ஒன்றாகக் காணும் அகக்காட்சி.

குண்டலினியோகம் என்னும் மனவளக்கலை ஒரு சிறந்த உளவியல் விஞ்ஞானமாகும். பிரபஞ்சத்தில் உலவும் எந்தவித அலையானாலும் இறை வெளியிலதான் நடைபெற வேண்டும்.

தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்த ஆற்றலால் அது எந்த அலையையும தடுத்து வளைத்துச் சுழலச் செய்கின்றது.

அலையின் விரைவுக்கேற்பச் சுழல் வட்டதினுடைய அளவும் ஒவ்வொரு வட்டத்திற்கும் இடையிலான நீளமும் வேறுபடும்.

அலையின் சுழற்சி விரைவைக் காலத்தால் கணக்கிட்டு ஒரு வினாடிக்கு இத்தனை சுழற்சி என்றும், சுழற்சிகளுக்கிடையே நிற்கும் கால நீளத்தை அலை நீளம் (wave length ) என்றும் வழங்குகிறோம்.

இந்த இயற்கை நியதியின் கீழ் மன அலைச் சுழல்களும் நடைபெறுகின்றன.

மனிதன் கர்மேந்திரயங்களான கை, கால், வாய், குதம், பால்குறி இவற்றை இயக்கும்போதும், கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஞானேந்திரியங்களை இயக்கும் போதும் சீவகாந்த அலை தூண்டப்பெற்று வினாடிக்குப் பதினாலு முதல் நாற்பது வரையில் சழற்சி விரைவு நடைபெறுகிறது. இதனை பீட்டா அலை (Beta wave) எனக் கூறுகிறோம்.

---

மனதைப் புலன்களிலிருந்து விலக்கிக் கொண்டு குண்டலினி ஆற்றலை எழுப்பி அதனைப் புருவ மத்தியிலோ (Agna) அல்லது உச்சியிலோ (Thuriyam) வைத்து தியானம் செய்யும் போது மன அலைச்சுழல் எட்டிலிருந்து பதின்மூன்று வரையில் விரைவு குறைந்த நடைபெறுகிறது.

இதனை அமைதி அலை (Alpha wave) என்று கூறுகிறோம்.

முன்னமே அமைதி நிலையில் பழகிக் கொண்டவாகள் இதே மனதைப் பேரியக்க மண்டல விரிவில் பரவவிட்டு நிலைத்துத் தியானம் செய்தால் மனஅலைச்சுழல் விரைவு வினாடிக்கு 4 முதல் 7 வரையில் இயங்குகிறது.

இதனை (Thetawave ) எனவும், மனம் பேரியக்க மண்டலத்தைத் தாண்டி இறைவெளியில் நின்று அதிலேயே ஆழ்ந்து நிற்கும் போது வினாடிக்கு 1 முதல் 3 வரையில் ஓடும். இதனை வீடுபேறு (Delta Wave ) அல்லது இறை நிலையென்று வழங்குகிறோம்.

இவையெல்லாம் யுகத்தினால் பேசும் கற்பனையென்று எவரும் கருத வேண்டாம்.

லண்டன் மாநகரில் இயங்கும் ஒருஉளவியல் ஆராய்ச்சி நிலையத்திலும் நமது நாட்டில் ஆந்திர மாநிலத்தில் விஜயவாடா நகரில் இருக்கும் SIRI என்ற ஆராய்ச்சி நிலையத்திலும் குண்டலினித் தவம் செய்யும் போது EEG ( Electro Encephelogram ) என்ற விலையுயர்ந்த மன அலையை அளக்கும் நுண் கருவியின் மூலம் கணிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைளைதான் கூறுகிறோம்.

---

இத்தகைய அகத்தவப் பயிற்சியெனும் உளவியல் விஞ்ஞானத்தின் பயன்கள் வாழ்வில் பலப்பல. பிரம்மஞானம் என்னும் மனிதப் பிறப்பின் பயனை எளிதாக அடையும் வழி இதுவே.

மன அலைகளில் சுழல்விரைவு குறையக் குறைய மனிதன் நிலைபொருளான அறிவாகி மனமே தரத்தில் உணர்கின்றது.

பிறகு மனம் அற்று அறிவே அகக் காட்சியாகும். அக்காட்சியில்தான் இறைநிலையேதான் அறிவு என்பது விளங்குகின்றது. இந்த அனுபவத்தில்

"உன்னிலே நானடங்க என்னுளே நீ விளங்க

உனதுஅருள் ஒளிர எனதுள்ளம் தூய்மை பெற்றேன்.

இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்

எடுத்த மனிதப் பிறபெய்தியதே முழுமை"

என்று ஞானக்களஞ்சியத்தில் விளக்கப்பட்டுள்ளது. இது எல்லாருக்கும் சாத்தியமே. பிரம்மம் என்ற பேராதார நிலையை ஐயமின்றித் தெளிவாக உணர்ந்தவர்கள்தான்,

"தத்துவம் அசி"

"அகம் பிரம்மாஸ்மி"

"அயனாம்சம் பிரம்மம்"

"பிரக் ஞானம் பிரம்மம்"

என்று நான்கு வார்த்தைகளாலும் பிரம்ம ஞானத்தை உலக மக்களுக்கு விளக்கியுள்ளார்கள்.

## அறிவாய் நின்ற தெய்வம்.

---

தெய்வம் அறிவாய் தான் இருக்கிறது. அதனால்தான் “அறிவே தெய்வம்” என்று பாரதியார் சொன்னார். அறிவே தெய்வம் -எப்படி - விளக்குகிறார் வேதாத்திரி மகரிசி.

இரும்பைக் கொண்டு ஒரு கரண்டி செய்கிறோம். இரும்பு ஒரு கரண்டியாக்கப் பட்டிருக்கிறது. இப்போது இரும்பு என்றாலும், கரண்டி என்றாலும் அது ஒரே பொருளையே குறிக்கும்.

அதுபோல தெய்வம் என்ற அருட்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்கும் எல்லாமாக இருக்கிறது.

நாமாக மனித வடிவமாக இருப்பதும் அதுவே. இந்தக் கருத்தை மனதில் பதித்துக்கொண்டு உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் என்றாலும் தெய்வம் என்றாலும் ஒரு பொருளையே குறிக்கும்.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடுகிறது. கரண்டி என்ற பெயர் மறைந்து விடுகிறது. மீதம் இருப்பது என்ன? இரும்புதான்.

இரும்பை பல வடிவங்களாக்கி பெயர்களை அக்கருவிக்குக் கொடுக்கிறோம். வடிவத்தையும், பெயரையும் கழித்துவிட்டால் மிஞ்சுவது இரும்புதானே.

அதே போன்று நீங்கள் உங்களை அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

மனிதன் என்ற வடிவத்தையும், உங்கள் செயல்பதிவுகளாக உள்ள வினைப்பதிவுகளையும் கழித்துப் பாருங்கள். உங்களில் மிஞ்சுவது எல்லாம் வல்ல அருட்பேராற்றலாக விளங்கும் பரம்பொருளே.

---

உடலோ அணுக்களால் கட்டப்பட்ட ஒரு தோற்றம். அணுவோ எல்லாம் வல்ல அருட்பேராற்றலின் நுண்ணிய சழலலை.

உடலுக்குள் நுண்ணியப் பொருளாக உள்ள அணுவே உயிர். உயிருக்கு மத்தியில் துவங்கி பேரியக்க மண்டலம் முழுவதும் விரிந்து எல்லையற்ற விரிவு உடைய ஒரு அரூப நிலையே அறிவு.

நீங்கள் உங்கள் உடலை நினைத்துப் பாருங்கள். புலன்கள் வரையில் உங்களை எல்லை கட்டிக் கொண்டு உடலே "நான்" என்று எண்ணுகிறீர்கள்.

உடலில் உள்ள உயிரை நினைத்துப் பாருங்கள். உலகிலுள்ள எல்லா உயிர்களோடும் பேரியக்க மண்டலத்தில் ஆற்றல்களாமாக நிறைந்துள்ள பரமாணு மண்டலத்தோடும் ஒன்றுபட்டிருக்கறீர்கள்.

இந்த நினைவில் ஆன்மாவாய் பேரியக்க மண்டலம் முழுவதும் பரவியுள்ள சக்தியாய் உணர்கிறீர்கள்.

அதற்கும் மேலாக நுணுகி நின்று உங்கள் அறிவை நோக்குங்கள்.

உயிராற்றலின் மையத்தில் தொடங்கி, உடலிலே பரவி பேரியக்க மண்டலம் முழுவதும் பரவி அதற்கும் அப்பாலும் உள்ள பிரம்ம நிலையாய் சுத்தவெளியாய் உங்களை உணர்வீர்கள்.

உங்களது அறிவின் உண்மை நிலையை உணர்ந்தபின் உங்களது அறிவின் விரைவே அன்பாக மலர்ந்து உயிர்களுக்க உதவி செய்து உயிர்த் துன்பம் போக்கவும் எந்த உயிருக்கும் துன்பம் தாராமல் செயலை ஒழுங்குப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விழிப்பு நிலையும் வந்துவிடும்.

இந்த அறிவு நிலையிலேயே உங்களை உடலாகவும், உயிராகவும், அறிவாகவும் உணர்வீர்கள்.

உங்களது அறிவு எல்லையற்று விரிந்து அரூபமாக உணரும் நிலையில் அறிவேதான் "பிரம்மம்" என்ற உண்மையை உணர்வீர்கள்.

இந்த உள்ளொளியில் தன்முனைப்பு என்ற இருள் மறைந்து விடும். ஒருதலைப்பட்சம், வெறுப்புணர்ச்சி, பொறாமை, கடும்சொல் நீக்கி, நீங்கள் உங்களை உத்தமப் பொருளான இறைவனாகவே காண்பீர்கள்.

காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பறன்றோ
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலேறி என் கண்ணம்மா
கண்குளிரப் பாரேனோ. --அழுகணி சித்தர்.

தன்னை வெளிக்காட்டாத அறிவைப் பற்றிக்கொண்டு, வீடுபேறு எனும் கடை நிலையை அடைய முயற்சி செய்யும்போது, மயக்க நிலையில் உள்ள ஐம்புலன்கள் எங்களை மீறி, உன்னால் வீடுபேறு அடையமுடியுமா என்று தடுக்க முயற்சி மேற்கொள்ளும்.

இருந்தாலும் நான் அறிவின் துணையோடு நிச்சயமாக வீடுபேறு அடைந்தே தீருவேன்.

## ஜோதி என்றால் என்ன?

ஜோதி மவுனியாய்த் தோன்றினான் என்று குறிப்பிடுகிறார் தாயுமானவர்.

உண்மையான சிவம் வெட்டவெளிதான் (சுத்தவெளி) என்றால், அது எல்லாவற்றிலும் ஊடுருவிப் பாயக் கூடியது.

அது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்கின்ற நான்கு தன்மையும் உடையதாக இருக்கிறது.

அதை வைத்து நீங்கள் எந்தக் கணக்கு வேண்டுமானாலும் போடுங்கள். ஆனால் தாயுமானவர் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற வார்த்தைகளில் விளக்கினார்.

பிரகாசம் என்பதை ஜோதி என்று அந்தக் காலத்தில் சொன்னார்கள். அறிவைக் குறிப்பதற்காகத்தான் அந்த வார்த்தையையே போட்டிருந்தார்கள்.

ஜோதி என்றாலும், விளக்கு என்றாலும் ஒன்றே. "விளக்கம்" என்பதிலிருந்துதான் "விளக்கு" என்ற வார்த்தையே வந்திருக்கிறது.

விளக்குவதுதான் அறிவு. அதனால், அந்த அறிவை "சுடர்" என்றும், ஜோதி என்றும், விளக்கு என்றும் சொல்வார்கள்.

வள்ளலார் கூட ஜோதி என்று அறிவைத்தான் சொல்கிறார். இறைநிலை அறிவாக இருப்பதானால், அது ஜோதி வடிவமானது என்று சொல்கிறார்கள்.

அந்த முறையில் இறைநிலையை உணர்ந்து கொண்டீர்களானால், அதிலிருந்துதான் செயல்விளைவு தத்துவத்திற்கு வரலாம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பதனால், அது எல்லோருள்ளும் இருக்கிறது.

அதனால்தான் எல்லோர் செயலையும் கண்காணிப்பதற்கு அதனால் சுலபமாக முடிகிறது.

உங்களுக்குள்ளேயே உள்ளதால், செயலுக்குத் தக்க விளைவை நீங்களே பெற்றுக் கொள்கிறீர்கள் என்கிறார் வேதாத்திரி மகரிசி.

---

## அறிவின் முழுமை :

.

"அறிவு" என்பது உண்டா, இல்லையா? இல்லை என்று யாருமே சொல்ல முடியாது. ஆனால் அறிவு எப்படி இருக்கிறது?

எந்த பொருளுக்காகிலும் எந்த விஞ்ஞானத்துக்காகிலும் எந்த கருவிக்காகிலும் அடங்குமா? புலன்களால் காண முடியுமா? முடியாது.

அப்படியானால் அது என்ன? அரூபம். முழு முதற் பொருளாகிய ஆதி நிலை; வெட்டவெளி; சிவம் என்று சொல்லக் கூடியது அரூபமா, ரூபமா? அதுவும் அரூபம் தான். அரூபத்தில் இரண்டு இருக்குமா? இந்த கேள்விதான் உண்மையை உணர்த்தக் கூடிய கேள்வி.

ரூபமாக இருந்தால் எல்லை (Volume) கட்டிவிட முடியும். எண்ணிக்கைக்கு உட்படுத்திவிட முடியும். (It would be circumscribed and subject to the numbering process).

ஆனால் அரூபம் இரண்டு இருக்க முடியாதே ! இரண்டு பூஜ்யம் (zero) என்னவாகும்? ஒரு சைபர்தானல்லவா? அதுபோல அறிவும் பிரம்மமும் ஒன்றுதான்.

அந்த பிரம்மம் என்ற நிலையிலே, முழு முதற் பொருளாக, சுத்த வெளியாக, இந்த பிரபஞ்சத்தையும் தாண்டி அப்பாலும் சூழ்ந்து உள்ளது.

அதுவே அணுவாகி இயங்கிப் பிரபஞ்சமாக இருந்து கொண்டிருக்கிறது;

அந்த பிரபஞ்சத்தில், ஒவ்வொரு பொருளிலும் தன்மையிலும் இருந்து கொண்டு உயிர்களில் இவைகளையெல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றலாகவும் இருக்கிறது.

ஒரே ஒரு பொருள்; பல இயக்கங்கள். இந்த உண்மையை மனிதன் உணரும்போது தான் ஆறாவது அறிவு முழுமை பெறுகிறது.

அணுவாயும் தனித்தனியே இயங்கிக் கொண்டு
ஆறாகவும் காட்சியளிக்கும் நீர்போல்
அணுவாயும் கூட்டுறவாய்க் காட்சியாகும்
அகண்ட பேரண்டத்தில் தோற்றமெல்லாம்
அணு நிலையை பருஉருவில் உணரவல்ல
அறிவு தான் உயிருணர்வாம் அதற்கு மேலும்
அணுவுக்கு ஆதிநிலை பிரம்மம் என்று
ஆழ்ந்துணர்ந்த அறிவே மெய்யுணர்வு ஆகும்". ஞானக்களஞ்சியம்.

## தெய்வம் அறிவு

இறைநிலையே தனது பரிணாமத்தால் நுண் விண்ணாகி அண்டங்களாகி, உயிரனங்களாகி, மனமாகி, மனிதனிடத்து நுண்ணிய பொருட்களையெல்லாம் உணரவும், விரிந்தகன்ற எல்லை இல்லாத இறைவெளியாகிய தன்னையே தன்னகத்தே அடக்கிக் கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெறும் போது அறிவாகிறது.

## அறிவின் நான்கு நிலைகள்

### 1] உடலறிவு :

மனிதனின் அறிவின் தரத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பசி, தாகம், பாலுணர்ச்சிவேகம் ஆகியவற்றைச் சமன் செய்து கொள்ளுதல் மட்டும் தான் வாழ்க்கை என்ற அளவில் சில பேருக்கு அறிவு நின்று விடும்.

இதுவே முதல்படி. முன்னோர் சொன்ன அன்னமய கோசம் இது என்று சொல்லலாம்.

### 2] மனஅறிவு :

உடல் தேவைகள் நிறைவு பெற்றுவிட்டன என்ற பிறகு அவற்றுக்கப்பால் மனதின் தேவை என ஒன்று வரும்.

இயற்கை அழகுகளை ரசித்தல், அவற்றைப் போல் போலி செய்தல் என்ற அளவில் சிலருக்கு அறிவு விரிந்து நிற்கும்.

இதுவே இரண்டாம் பிரிவு. இதனை முன்னோர் சொன்ன மனோமய கோசமாகக் கொள்ளலாம்.

3] விஞ்ஞான அறிவு :

அறிவின் தரம் இன்னும் ஒரு படி உயரும்போது, இயற்கை நிகழ்ச்சிகளுக்கும், இயற்கை நியதிகளுக்கும் காரணம் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியாக அறிவு எழுந்து நிற்கும்.

இதுவே மூன்றாம்படி. இதனை முன்னோரின் விஞ்ஞானமய கோசம் எனலாம்.

4] இறையறிவு :

நியதி தவறாமல் இயக்கம் நடத்தும் அந்த இயற்கையின் தத்துவம் என்ன? அதனை ஆராயும் நான் யார்? எனக்கும் அதற்கும் தொடர்பென்ன? உறவென்ன ? என்று ஆராயும் பக்குவம் பெற்ற அறிவின் நிலையே அதன் நான்காம் படி.

இதனையே முன்னோர் சொன்ன பிராணமய கோசத்துக்கும் அதன் முடிவான ஆனந்தமய கோசத்துக்கும் ஒப்பிடலாம்.

"அறிவுக்கு நான்கு நிலை இயற்கை தேவை
அவை மட்டும் நிறைவு கொளல் ஒன்று [இரண்டு]
பொறி புலனால் இயற்கையெழில் ரசித்தல், மூன்று
பகுத்தறிவால் இயற்கை ரகசியங்கள் ஆய்ந்து
அறிந்து கொளல், அறிவித்தல்; நான்கோ அப்பால்
அத்தகைய இயற்கைக்கே மூலம் நாடி
அறிவதற்கென் றறிவெழுந்த நிலையாம். "(வேதாத்திரி மகரிசி)

---

அங்கிங்கெனாதபடி........எங்கும் நிறைந்துள்ள இறைவன் அறிவு சொரூபமாக இருக்கிறான். இறைவனின் குணமே பேராற்றல்- பேரறிவு -இயல்பூக்கம்.

இப்பேரறிவு ஆனந்தம் அடைகிறது. பேரறிவாக விளங்கும்அதனிடத்துப் பேரானந்தமும் பொலிகிறது. ஏக காலத்தில் பேரறிவு சொரூபமாககும்பேரானந்த சொரூபமாகவும் அது இருக்கிறது. அறிவே ஆனந்தம். ஆனந்தமே அறிவு.

## அறிவு சொரூபமே ஆனந்தம்.

"அன்றுஎன்றும் ஆம்என்றும் உண்டோ-உனக்கு
ஆனந்தம் வேண்டின் அறிவுஆகிச் சற்றே
நின்றால் தெரியும் எனவே-மறை
நீதிஎம் ஆதி நிகழ்த்தினான் தோழி"
சங்கர சங்கர சம்பு-சிவ, சங்கர சங்கர சங்கர சம்பு.(ஆனந்த30)

தோழி! இல்லை என்றும், உண்டு என்றம் பாகுபாடு உண்டோ. உனக்குப் பேரின்பம் தேவைப்படின், அறிவு மயமான சற்றே நின்றால், தெரிந்து கொள்ளலாம். அவ்வாறான மறை நீதியை எம் போன்றோர்க்கு எம் தலைவன் கூறியருளினான்.

வேண்டாம் என்றும் வேண்டும் என்று உலகில் உள்ளதோ? உனக்கு ஆனந்தம் வேண்டின், அறிவுமயமாக அசையாது நின்றால் தெரியும். இதனை என் குருவானவர் எனக்கு உபதேசித்தார்.

## அறிவின் முழுமை பெற்றவர்கள் ஞானிகள்.

"அறிவு" என்பது உண்டா, இல்லையா? இல்லை என்று யாருமே சொல்ல முடியாது.

ஆனால், அறிவு எப்படி இருக்கிறது? எந்த பொருளுக்காகிலும் எந்த விஞ்ஞானதுக்காகிலும் எந்த கருவிக்காகிலும் அடங்குமா? புலன்களால் காண முடியுமா? முடியாது. அப்படியானால் அது என்ன? அரூபம்.

முழு முதற்பொருளாகிய ஆதிநிலை; வெட்ட வெளி; சிவம் என்று சொல்லக் கூடியது அரூபமா, ரூபமா? அதுவும் அரூபம் தான்.

அரூபத்தில் இரண்டு இருக்குமா? இந்தக் கேள்வி தான் உண்மையை உணர்த்தக் கூடிய கேள்வி.

ரூபமாக இருந்தால் எல்லை (Volume) கட்டிவிட முடியும். எண்ணிக்கைக்கு உட்படுத்திவிட முடியும். (It would be circumscribed and subject to numbering process)

ஆனால் அரூபம் இரண்டு இருக்க முடியாதே! இரண்டு பூஜ்யம் (zero) என்னவாகும்? ஒரு சைபர் தானல்லவா? அது போல அறிவும் பிரம்மமும் ஒன்று தான்.

அந்த "பிரம்மம்" என்ற நிலையிலே, முழு முதற் பொருளாக, சுத்தவெளியாக, இந்தப் பிரபஞ்சத்தையும் தாண்டி அப்பாலும் சூழ்ந்து உள்ளது.

அதுவே அணுவாகி இயங்கிப் பிரபஞ்சமாக இருந்து கொண்டிருக்கிறது;

அந்தப் பிரபஞ்சத்தில், ஒவ்வொரு பொருளிலும், தன்மையிலும் இருந்து கொண்டு உயிர்களில் இவைகளையெல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றலாகவும் இருக்கிறது.

ஒரே ஒரு பொருள்; பல இயக்கங்கள். இந்த உண்மையை மனிதன் உணரும்போது தான் ஆறாவது அறிவு முழுமை பெறுகிறது.

ஆறாவது அறிவு முழமைப் பெற்றவர்களை ஞானிகள் என்று அழைக்கிறோம்.

ஞானநிலை பெற்ற ஞானிக்கு நீக்க வேண்டியது எதாவது இருக்கிறதா? கொள்ள வேண்டியது எதாவது இருக்கிறதா?

“நன்றே செய்வாய் பிழை செய்வாய். நானோ இதற்கு நாயகம்” என்பது ஞானியின் வாக்கு.

உலகில் நிகழும் நிகழச்சிகளுக்கெல்லாம் ஞானி சாட்சிமயமாக இருக்கின்றான்.

உனக்கு உண்மையான ஆனந்தம் வேண்டும் என்றால் “நீ அறிவுடன் இருந்தால் உனக்கு தெரிந்து விடும்.”

பரமாத்மா சீவாத்மா அறிவை அறிந்து ஞானத்தில் நின்றால் உனக்கு ஆனந்தம் வந்துவிடும்.

அறிவை அறிவதுதான் இலட்சியம். ஞானத்தை அடைந்து அதில் நிலைத்தால் ஆனந்தம் கிடைக்கும்.

## இறைநிலையில் பேரறிவு

இப்போது நாம் வெளியே உலகில் வந்து விட்டோம். எல்லோரும் உலவிக் கொண்டு இருக்கின்றோம்.

அம்மா வயிற்றில் உருவான போது இறையாற்றல் எப்படி மேலும் அதைக் காப்பாற்றியது பாருங்கள்.

தாய் வயிற்றில் குழந்தை இரண்டு மாதம் ஆனபொழுது குழந்தையின் உடம்பைச் சுற்றி நீரால் ஆகிய ஒரு பை (Water bag) அமைகிறது.

நாம் கட்டிலில் ஒரு திண்டு போட்டு வைத்திருக்கிறோமே, அது போல மேல்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் நீர் பை (Water bag) என்று ஒன்றை கட்டிலில் போட்டு வைத்திருப்பார்கள்.

ஏன்? அதில் படுத்தால் எப்படி இருக்கும்? அவ்வளவு அருமையாக இருக்கும்.

அது போல் தாயின் வயிற்றில் குழந்தைக்கு இரண்டு மாதம் ஆனால் போதும் நீரால் ஆன பை (Water bag) உருவாகிறது. ஏன்?

அதற்கும் மேலாக குழந்தை வளர்ச்சியுறும் போது அந்தக் குழந்தையை தாங்கிக் கொண்டிருக்கிற தாய் அப்படி இப்படி நடக்க வேண்டி வரும்.

படுக்கும் போது பிரழும்படி இருக்கும். ஒவ்வொரு பொருளும் எடுக்கும்போது குனிய வேண்டியதாய் இருக்கும்.

அப்போது எல்லாம் அந்தக் குழந்தைக்கு அழுத்தம் கொடுக்கக் கூடாது. அது நைந்து போகக் கூடாது.

அதற்காகதான் நீர் பை (Water bag) அமைகிறது. நீர் பைக்குள் குழந்தை இருக்கிறது. அது அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்கிறது (Shcok Absorver).

இரு ஒரு அனுமானம் அல்ல. இது எல்லோருக்கும் தெரியும். இதுதான் இறைநிலையின் பேரறிவு. அறிவு என்பது இயக்க ஒழுங்கு (Order of function) எதையும். ஒழுங்காக இயக்குவது அறிவு.

எல்லாப் பொருட்களிலும், எல்லா இடங்களிலும் இயக்க ஒழுங்காக இருப்பது அறிவே. (Consciousness is the order of function in everything and in everywhere).

இந்த நீர் பையை யார் செய்தது? அம்மா-அப்பா செய்தார்களா? நண்பர்கள் செய்தார்களா? அரசாங்கம் செய்ததா? யாரும் செய்யவில்லை. இயற்கையின் பேரறிவுதான் இயக்க ஒழுங்காக விளங்குகிறது.

## அறிவை அறிந்த அறிவு.

ஆன்மீகத் துறை என்பது அகநோக்கு பயிற்சி மூலம் அறிவை அறிவில் நிறுத்தி, அதனுடைய இருப்பிடம், இயல்பு. இயக்கம், விளைவு இவைகளைக் கண்டு, அதே சக்தி நான் என்று சொல்கின்ற போது வேகமாகவும், ஞாபகமாகவும் இரு நிலையாக ஒன்று சேர்ந்து இயங்குகின்ற தன்மையைக் கூர்ந்து ஆராய்ந்து அறிந்து கொண்டு, அதே சக்தி கோடானு கோடி உடலியக்க உருவங்களில் அவ்வற்றிற்கு ஏற்ற அறிவியக்கமாகவும் சிறப்புற்று விளங்குவதை அறிந்து கொள்வதாகும்.

இந்நிலையே பேரறிவு என்றும் சொல்லப்படும். அறிவாக இருக்கின்ற அரூபா ரூப சக்தியை அறியுமிடத்து, அதன் மூலமாகவும், ஆதியாகவும் இருக்கின்ற அகண்ட, பூரண பேராதார சக்தியும் அறியப்படும்.

இதுவரை புலனுணர்ச்சிகளைக் கொண்ட "இந்த உருவம் வரையில் நான்" என்று ஒருவன் எண்ணியிருந்த நிலை விரிந்து, அரூபச் சக்தி நிலையில் எங்கும் நிறந்தியங்குகின்ற சக்தியாக அவனே இருக்கின்ற நிலையை அறிந்து கொள்ளுகிறான்.

இவ்விரிந்த அறிவின் நிலையில் இருக்கிற அவன், இன்ப துன்பங்களை உணருகின்ற அனுபவிக்கின்ற கோடானு கோடி உயிரினங்களின் தேவை, அனுபோகம், அனுபவங்கள், கடமையாவையும் அறிந்து அதற்கேற்பச் செயலாற்றி வாழ முற்படுகிறான்.

"உனக்கு ஆனந்தம் வேண்டின் அறிவுஆகிச் சற்றே

நின்றால் தெரியும் எனவே-மறை
நீதிஎம் ஆதி நிகழ்த்தினான் தோழி"

நிலையான ஆனந்தம் வேண்டுமென்றால் மெய்ப்பொருளிடத்தில் மனதை நிலை நிறுத்த வேண்டும்.

மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்திலிருந்துதான் ஆனந்தம் தோன்றுகிறது.

உண்மை எது என்று நமக்குத் தெளிவாக விளங்கிவிட்டால் மனம் உலகத்தில் வரும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளைக் குறித்துச் சிறதும் அசைவதில்லை.

வேதங்கள் உலகம் அநித்தியமானது என்றும் மெய்ப்பொருள் ஒருவரே நித்தியானமானவர் என்றும் கூறுகின்றன.

உலகப்பொருள்களில் உள்ள பற்றுதல்தான் இன்ப துன்பமாக வடிவெடுத்து வருகின்றது என்பது வேதம்.

இப்பொழுது நாம் காணும் உலகக் காட்சி மனதினுடைய குறைபாடே ஆகும்.

மனதிலுள்ள மாசு நீங்கும்போது இவ்வுலகம் தெய்மாகத் தென்படுகிறது என்று வேதம் கூறும் இத்தத்துவத்தை ஞானகுரு நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

வேதத்தைக் கற்பதனால் உண்டாகும் வாசா ஞானம் குருவினுடைடைய கிருபையினால் அனுபவமாக மாறுகிறது.

## பேரின்ப வெள்ளம்

அன்பும் கருணையும் உடைய தெய்வ நிலையானது விண் முதல் ஆறறிவாகி, மனித மனத்தின் மூலம் தனது பரிணாமப் பயணச் சரித்திரத்தை உள்ளுணர்வாகக் காட்டிய பேரறிவிற்கு நன்றி கூறுமிடத்து, அத்தகு உள்ளுணர்வு அடைந்த நம்மையே இறைநிலைக்கு அர்ப்பணம் செய்து மகிழ்ச்சியடைவோம்.

மேலும் உலக வாழ்வில் உயிரினங்களின் உற்பத்திக்கு ஏற்ற வகையில் பெண்ணினத்தை வடிவமைத்து எல்லா உயிர்வகைக்கும் அன்பு காட்டி, கருணையை வழங்கிக் காக்கும் அந்தப் பேராதார இறைநிலைக்கு நன்றி கூறி மன நிறைவு பெறுவோம்.

எல்லா உயிர் வகைகட்கும், உணவாகவும் மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும், சிக்கலில்லாமலும், வரையறை இன்றியும், தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக் காத்து வருகின்றன தாவர இனங்கள்.

அத்தகு தாவர வர்க்கங்களை அன்போடும், கருணையோடும் உருவாக்கி, இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும், கருணைக்காகவும் இறைநிலைக்கு நன்றி கூறி, அப்பெருமகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்.

ஒவ்வொரு நாளையும் இறைநிலையின் அன்பின் ஊற்றுப் பெருக்க நன்னாளாகவே கருதி என்றும் கொண்டாடுவோம்.

## ஆனந்தம் வேண்டின் அறிவில் நில் - தாயுமானவர்

இறைவனே! ஆனந்தத்தின் மொத்தவடிவம். ஆனந்தம் பெறவே உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

உழைப்பதும், உண்பதும், ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு வாழ்வதும் எல்லாம் ஆனந்தத்தின் பொருட்டே. நம்மால் என்றுமே ஆனந்ததை விடுத்து வாழவே முடியாது.

எங்கும் ஆனந்தமே. எதிலும் ஆனந்தமே! இதற்காகவே, இறைவனும் சிற்சபையில் ஆனந்த நடனமிடுபவனாக இருக்கிறான்.

இறைவன் எல்லா திசைகளிலும் நிறைந்திருக்கிறான். நம் இதயத்தாமரையாகிய மனத்தில் தேனாக இருந்து தித்திக்கும் இனிமை உடையவன் இறைவன்.

அவனையே எப்போதும் சிந்திப்போமாக.பொருளின் மீது நாட்டம் கொண்டவனுக்கு அருட்செல்வம் என்றும் எட்டாக்கனியாகும்.

திருவோட்டையும், செல்வமாகிய நிதியையும் ஒன்று போல காணும் உத்தமர்களின் நெஞ்சத்தை தன் இருப்பிடமாக கொண்டிருப்பவன் இறைவன்.

குழந்தையின் மனதில் தான் என்னும் அகங்காரம் இல்லை. இவர் நல்லவர், கெட்டவர், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதங்கள் தெரிவதில்லை.

மனிதனும் குழந்தை போல வெள்ளை உள்ளம் கொண்டால் அவனே ஞானியாவான்.வாழ்வில் எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் மனம் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது இறையுணர்வில் எப்போதும் இருக்க வேண்டும். ஞானம் கைவரப்பெறும்.

ஞானத்தினால் வரும் ஆனந்தம் நிலையானது. இதுதான் வாழ்வில் இலட்சியம்.

ஆனந்தம் நான்கு வகையில் கிடைக்கலாம்

1. பொருள்கள் மூலம் கிடைக்கும் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
2. வைராக்யத்தின் மூலம் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
3. அறிவால் ஆசைகைளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
4. ஞானத்தால் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.

அறிவினால் ஆசையைப் போக்கிவிட்டால், ஆசைகளை சீரமைத்துவிட்டால் பேராசைகள் போய்விடும். ஆனந்தம் நிலைத்து நிற்கும். பூரண திருப்தி கிடைக்கும்.

அறிவு நிலைத்துவிட்டால் பொறாமைப்படும் மனது அழிந்து விடும். கோபப்படும் மனது அழிந்து விடும். விருப்பு வெறுப்புள்ள மனம் அழிந்துவிடும்.

அழகான மனதுடன் இருப்போம். அறிவின் லட்சணம் “நான் ஆனந்த சொரூபம்.”

உனக்கு ஆனந்தம் வேண்டின் அறிவில் நில். ஆனந்தத்தில் வரும் களிப்பினை நான் இதுவரை சொன்னேன் என்று தாயுமானவர் ஆனந்தக்களிப்பினை முடிக்கிறார்.

“ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

வாழத்தெரிந்திடில் ஆனந்தமே”